இன்றைய வேளாண் செய்திகள்
14.03.2013 A.M

## எளிய முறையில் பயறு வகை சாகுபடி



பயறுவகைப் பயிர்களில் இருந்து மனித வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்து கிடைக்கிறது. இப் பயிர்களை எளிய முறையில், அனைத்து விவசாயிகளும் சாகுபடி செய்யலாம். குறைந்த செலவில், அதிக மகசூலும் பயறுவகைப் பயிர்களிலிருந்து கிடைக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உளுந்து, நஞ்சை தரிசில் மட்டுமே பயிரிடப்படுகிறது. மேலும், பயிர் சாகுபடி மற்றும் அறுவடையின்போது குறைந்த அளவு கவனம் செலுத்தப்படுகிறது. இப்போது சுமார் 500 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வரும் பயறு வகைகளில் இருந்து, ஹெக்டேருக்கு சுமார் 400 கிலோ என்ற அளவில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

ஆகவே, பயறுவகைப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம். பயறுவகை உற்பத்தியை அதிகரிக்க, சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும். தனிப் பயிராகவும், ஊடுபயிராகவும் மற்றும் வரப்போரத்திலும் பயிரிடலாம். உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்ய பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த உரம், களை, நீர் நிர்வாகம் செய்து காலத்தே அறுவடை செய்ய வேண்டும். ஏக்கருக்கு 25 கிலோ என்ற விதை அளவில், நெல் அறுவடைக்கு 5-10 நாள்களுக்கு முன் மெழுகு

பதத்தில் விதைக்க வேண்டும். வயல் மெழுகு பதத்தில் இல்லை என்றால், தண்ணீர் பாய்ச்சி மெழுகு பதம் வந்ததும் விதைக்கலாம்.

விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த பூஞ்சாண விதை நேர்த்தி செய்யலாம். இதற்கு சூடோமோனாஸ் என்ற உயிரியல் பூஞ்சானக் கொல்லியை கிலோவுக்கு 10 கிராம் என்ற அளவில் அல்லது டிரைகோடெர்மாவிரிடி என்ற

உயிரியல் பூஞ்சானக் கொல்லியை கிலோவுக்கு 4 கிராம் என்ற அளவில் விதையுடன் கலந்து 24 மணி நேரத்திற்கு பின் விதைக்க வேண்டும்.

காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து வேர் முடிச்சுகள் மூலம் பூமியில் நிலைப்படுத்துவதற்காக ரைசோபியம் என்ற உயிர் உரத்தையும், மண்ணில் கிட்டாத நிலையில் உள்ள மணிச்சத்தை கிடைக்கச் செய்ய பாஸ்போ பாக்டீரியா என்ற உயிர் உரத்தையும் ஹெக்டேருக்கு 3 பாக்கெட் வீதம் 400 மி. ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து, விதையுடன் கிளறி நிழலில் அரை மணி நேரம் உலர்த்தி விதைக்க வேண்டும்.

தழைச்சத்து ஹெக்டேருக்கு 12.5 கிலோ வீதமும், மணிச்சத்து ஹெக்டேருக்கு 12.5 கிலோ வீதமும் பயிருக்கு உரமிட வேண்டும். பயறு நுண்ணூட்டம் அல்லது தமிழ்நாடு

வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் தயாரிக்கப்படும் பயறு வொண்டர் நுண்ணூட்டம் ஹெக்டேருக்கு 5 கிலோ வீதம் இட வேண்டும்.

இடைவெளி 3ல10 செ.மீ. என்ற அளவில் சதுர மீட்டரில் 33 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட வேண்டும். நன்செய் தரிசில் உளுந்து பயிர் சாகுபடி செய்யும்போது கண்டிப்பாக 2 சதவீத டிஏபி உரக்கரைசல் இலை வழியாக தெளிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 10 கிலோ டிஏபி உரத்தை 25 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

பூக்கும் நிலையில் ஒரு முறையும், பிறகு 15 நாள்கள் கழித்து மறுமுறையும் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இவ்வாறு இலைவழி உரம் தெளிப்பதால் பூ, பிஞ்சு உதிர்வது கட்டுப்படுத்தப்படும். தழைச்சத்து குறைவு உடனடியாக சரி செய்யப்படுகிறது.

ஒரு சமயத்தில் அறுவடை செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைக்கிறது.

பயறு அறுவடை செய்யும்போது 80 சதவீதத்திற்கும் அதிகமான காய்கள் முதிர்ச்சி அடைந்தவுடன், செடிகளை தரைமட்டத்திற்கு அரிவாளால் அறுவடை செய்து கட்டி வைத்து, பின் வெயிலில் காய வைத்து கையிலாலோ அல்லது இயந்திரங்களை வைத்தோ மணிகளைப் பிரித்து எடுக்க வேண்டும்.

இவ்வாறு தரைமட்டத்திற்கு வெட்டுவதால் மண்ணில் இருக்கும் வேர்கள் மண்வளத்தைப் பெருக்கும். இயந்திரத்தினால் அறுவடை செய்யும்போது வயலில் மண்ணின் ஈரத்தன்மை மிதமாக உள்ளதா என்று கண்டறிந்துவிட்டு அறுவடையை மேற்கொள்ளலாம்.

அறுவடை இயந்திரம் மூலம் 1 மணி நேரத்தில் 1 ஏக்கர் உளுந்து மற்றும் பாசிப்பயறு செடிகளை அறுவடை செய்து, தானியங்களை சுத்தம் செய்து பிரித்து எடுக்கலாம். இயந்திரத்தைப் பயன்படுத்துவதால் சாகுபடி செலவைக் குறைக்கலாம்.

மேலும், பயிரை தக்க தருணத்தில் அறுவடை செய்து, மேலான பலனைப் பெறமுடியும். இவ்வாறு பயறு சாகுபடி செய்வதால் குறைந்த நாள்களில் எளிய செலவில் நிறைந்த மகசூல் பெறலாம்.

## மாம்பழ விளைச்சலில் அதிக மகசூல் பெற வழிகள்!



மாந்தோப்புகளில் முறையான பயிர் பாதுகாப்பு மேற்கொண்டு முழுமையான மகசூலைப் பெறலாம் என்று சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்தி குறிப்பு:

தத்துப்பூச்சிகள்: 3 வகையான தத்துப் பூச்சிகள் மற்றும் அதன் குஞ்சுகள் மா பூக்கும் தருணத்தில் பூங்கொத்துகளின் சாற்றை உறிஞ்சுவதால் வாடிவிடும். சேதம் அதிகரிக்கும் நிலையில் மொட்டுகளும், பூக்களும் கருகி உதிர்ந்து விடும். குஞ்சுகள் தேன் போன்ற திரவத்தைச் சுரப்பதால் இலை மற்றும் பூங்கொத்துகளில் இத் தேன் துளிகளை காணலாம். தேன் சொட்டுவதால் கேப்னோடியம் என்ற பூசணம் இலைகளைத் தாக்கி கருமையாக மாறி உதிரச் செய்துவிடும்.

இத் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த, பூங்காம்பு உருவாகும் தருணத்திலும், இரு வாரங்கள் கழித்தும் மருந்தடிக்க வேண்டும். ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் கார்பரில் 50 சதவீத நனையும் தூள் மற்றும் 2 கிராம் நனையும் கந்தகம் கலந்து தெளிக்க வேண்டும்.

மறுமுறை 1 லிட்டர் நீருக்கு ஒன்றரை மிலி பாசலோன் கலந்து தெளிக்க வேண்டும்.

இலை பிணைக்கும் புழு: புழுக்கள் மெல்லிய நூல் இழையால் அடுத்தடுத்த இலைகளைப் பிணைத்துக் கொண்டு உள்ளிருந்து சுரண்டி உண்ணும். தாக்குதல் அதிகமிருப்பின் நரம்புகள் மட்டுமே மிஞ்சும். இதற்கு ஒரு லிட்டர் நீருக்கு 2 மிலி என்ற அளவில் பாசலோன் 35 ஈ.சி. கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

பழ ஈ: முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்கள் சதைப்பகுதியைத் தின்று அழிக்கும். இதனால் தோலில் பழுப்புநிறத் திட்டுகள் உருவாகி அழுகி கீழே விழுந்துவிடும்.

எனவே, இடை உழவு செய்வதன் மூலம் மரத்தைச் சுற்றி மண்ணில் உள்ள கூட்டுப் புழுக்களை வெளிப்படுத்தி அழிக்கலாம். மிதைல் யூஜினால் கவர்ச்சிப் பொறி ஏக்கருக்கு 10 எண்கள் வைத்து தாய்ப் பழ ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம். வெம்பி விழுந்த பழங்களைச் சேகரித்து அழிக்கலாம். ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மிலி பென்தியான் அல்லது 2 மிலி மாலத்தியான் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மா தண்டுப்புழு: பெண் வண்டு தனது முட்டைகளை மரப்பட்டை அடியில் இடும். புழுக்கள் உருவாகி மரத்தை குடைந்துச் சென்று சேதம் உண்டாக்கும். மரத்தைச் சுற்றிலும் மரத்தின் தூள்களும், புழுவின் கழிவுகளும் இறைந்து கிடக்கும்.

இதற்கு கம்பியால் குத்தி புழுவை எடுத்து அழிக்கலாம். துளையில் 5 கிராம் கார்போபியூரான் 3 சதவீத குருணையை இட்டு களிமண்ணால் பூசலாம். 5 செ.மீ-க்கு 5 செ.மீ என்ற அளவில் சதுர வடிவ மரப்பட்டையை நீக்கி 10 மிலி மானோ குரோட்டோபாஃபஸ பஞ்சில் நனைத்து வைத்து மரப்பட்டை வைத்து களிமண்ணால் பூசலாம். காய்க்காத பருவத்தில் இதை மேற்கொள்ள வேண்டும்.

சாம்பல் நோய்: வெண்மை அல்லது சாம்பல் நிறப் பூசண வளர்ச்சி மலர் கொத்துகளில் காணப்படும். மலர்கள் பெருமளவில் உதிர்ந்து விடுகின்றன. இதற்கு ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் நனையும் கந்தகம் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

பறவைக் கண் நோய்: இலைகளில் வட்ட வடிவப் புள்ளிகள் தோன்றும். சிறுகிளைகள் நுனியில் இருந்து பின்னோக்கி காய்ந்துவிடும்.

எனவே ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் மாங்கோசெப் அல்லது ஒரு கிராம் கார்பண்டசிம் அல்லது 2 கிராம் குளோரோதலானில் மருந்துகளில் ஏதாவது ஒன்றை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

கூன் வண்டு: மாங்கொட்டை கூன் வண்டைக் கட்டுப்படுத்துவது குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் கு. இளஞ்செழியன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பொதுவாக வண்டு தாக்கிய பழமானது சுவையாக இருக்கும் என்பது மக்களிடையே உள்ள பரவலான கருத்து. ஆனால், கூன் வண்டானது அதிக சுவை கொண்ட பழங்களையே தேர்ந்தெடுத்து, அதன் மேல் முட்டையிட்டு பின்னர் புழுவாக மாறி உண்ண தொடங்கும்.

இவ் வண்டானது தமிழ்நாட்டில் நீலகிரி தவிர மா பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பாக சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படும். இவை அதிக இனிப்பு சுவை கொண்ட ரகங்களான நீலம், பெங்களூரா மற்றும் அல்போன்ஸô போன்ற ரகங்களைத் தாக்கக் கூடியது.

பாதிக்கப்பட்ட பழங்களானது தரம் குறைந்து காணப்படும். கூன் வண்டு தாக்கப்பட்ட பழங்களை ஏற்றுமதி செய்ய இயலாது. இதன் தாக்குதலால் 70 முதல் 90 சதவீதம் வரை வருமான இழப்பு ஏற்படுகிறது.

சேத அறிகுறிகள்: இவ்வண்டின் புழுவானது பிஞ்சு காய்களின் சதைப் பகுதியைக் குடைந்து சென்று மாங்கொட்டையின் உள்ளே உள்ள பருப்பை உண்ணும். மேலும், இதன் தாக்குதலால் பிஞ்சுகள் உதிர்ந்து விடும். உதிர்ந்த பிஞ்சுகள் மற்றும் காய்களை பிளந்து பார்த்தால் உள்ளே புழு இருப்பது தெரியும். ஒரு மாங்கொட்டையினுள் ஒரே ஒரு புழு காணப்படும்.

வாழ்க்கை பருவம் : தாய் வண்டானது முட்டையை கோலி குண்டு அளவுள்ள சிறிய பிஞ்சுகளில் தன்னுடைய மூக்குப் பகுதியினால் பிஞ்சின் மேல்பகுதியை சுரண்டி, முட்டைகளை தனித்தனியாக

இட்டு அதை ஒருவித திரவத்தினால் மூடிவிடும். முட்டையில் இருந்து ஐந்து நாள்களில் வெளிவரும் புழுவானது இளம் மஞ்சள்

நிறத்தில், கால்கள் இல்லாமல் இருக்கும். புழு மாங்கொட்டையின் உள்ளே கூட்டுப் புழுவாக மாறிவிடும். இவ்வண்டானது கரும் பழுப்பு நிறத்தில் இருக்கும்.

மேலாண்மை முறைகள்: மரப்பட்டைகளின் இடுக்குகள் மற்றும் வெடிப்புகளில் உறக்க நிலையில் உள்ள வண்டுகளைச் சேகரித்து அழிக்க வேண்டும்.

கீழே உதிர்ந்து கிடக்கும் பூ மற்றும் பிஞ்சுகளைச் சேகரித்து அழிப்பதன் மூலம் வண்டுகளை குறைக்கலாம். பென்தியான் 100 இசி 1 மி.லி. மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து கோலிகுண்டு அளவுள்ள பிஞ்சுகளில் தெளித்து இவ்வண்டின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

பொதுவாக வண்டு தாக்கிய பழமானது சுவையாக இருக்கும் என்பது மக்களிடையே உள்ள பரவலான கருத்து. ஆனால், கூன்வண்டானது அதிக சுவை கொண்ட பழங்களையே தேர்ந்தெடுத்து, அதன் மேல் முட்டையிட்டு பின்னர் புழுவாக மாறி உண்ணத் தொடங்கும்.

## வறட்சி பாதிப்பு: உயர்நிலைக் குழு மார்ச் 17-ல் ஆய்வு

வறட்சி பாதிப்பு குறித்து தமிழக அரசின் உயர்நிலைக் குழு, மதுரை மாவட்டத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 17) ஆய்வு மேற்கொள்கிறது.

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்த காரணத்தால் மதுரை மாவட்டம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சென்னை தவிர்த்த பிற மாவட்டங்களை வறட்சியால் பாதித்த மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழு டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்து முடித்துள்ளது. அதேபோல, தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் இக் குழு ஆய்வு செய்யும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

மதுரை மாவட்டத்தைப் பொருத்தவரை 23 ஆயிரத்து 316 ஏக்கரில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக வேளாண் துறை கணக்கீடு செய்துள்ளது.

இவற்றில் நெல் மட்டும் 6 ஆயிரத்து 170 ஏக்கரில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 35 ஆயிரத்து 704 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். விதைப்பு செய்யப்பட்ட நிலையில்,

மழையின்மையால் நடவு செய்ய முடியாமல் போனது, நடவு செய்யப்பட்டு அறுவடை செய்ய முடியாமல் போனது, தரிசாக விடப்பட்டது என மூன்று நிலைகளில் பாதிப்பு கணக்கிடப்பட்டுள்ளதாக வேளாண் துறையினர் தெரிவிக்கின்றனர். விவசாயிகளுக்கு பாதிப்பின் அடிப்படையில் நிவாரணம் வழங்குவதைப் போல, விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருந்து வருகிறது.

கடந்த மூன்று மாதங்களாக விவசாயிகள் குறைதீர் கூட்டங்களில் வறட்சி நிவாரணம் பிரதான கோரிக்கையாக இருந்து வருகிறது. உயர்நிலைக் குழுவின் ஆய்வுக்குப் பிறகு, வறட்சி நிவாரணம் அறிவிக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டு வந்தது. இந்நிலையில், உயர்நிலைக் குழு மதுரை மாவட்டத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்ய இருக்கிறது. இதையடுத்து வரும் வெள்ளிக்கிழமை (மார்ச் 15) நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 22-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

÷இதுகுறித்து ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மார்ச் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (மார்ச் 15) நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. சில நிர்வாகக் காரணங்களுக்காக இந்தக் கூட்டம் வரும் 22-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதில் பங்கேற்று, விவசாயிகள் தங்களது குறைகளை மனுக்கள் மூலமாகத் தெரிவிக்கலாம்.

## குண்டேரிப்பள்ளம் அணையிலிருந்து  பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு

கோபி அருகே குண்டேரிப்பள்ளம் அணையிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கோபியை அடுத்த கொங்கர்பாளையம் கிராமத்தில் குண்டேரிப்பள்ளம் அணை அமைந்துள்ளது. கடம்பூர், குன்றி, விளாங்கோம்பை மலைப்பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மழை பெய்தது. அந்த மழைநீர் குண்டேரிப்பள்ளம் அணையில் சேகரமானது.

குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 36-லிருந்து 37 அடியாக உயர்ந்துள்ளது. தற்போது கோபி மற்றும் சுற்றுப் பகுதிகளில் வறட்சி நிலவிவரும் நேரத்தில், பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, கீழ்பவானி மற்றும் காளிங்கராயன் பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்படாமல் உள்ளது. ஆனால், குண்டேரிப்பள்ளம் அணையில் மட்டும்

தற்போது 37 அடி தண்ணீர் இருப்பு உள்ளதால், இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அதன் அடிப்படையில், பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டது.

செவ்வாய்க்கிழமை குண்டேரிப்பள்ளம் அணையிலிருந்து இடதுகரை வாய்க்காலில் 12 கனஅடி தண்ணீர், வலதுகரை வாய்க்காலில் 8 கனஅடி தண்ணீர் என, மொத்தம் 20 கனஅடி தண்ணீர் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. 8 நாட்களுக்கு ஒருமுறை என முறை வைத்து தண்ணீர் திறந்து விடப்படும் என்றும், அடுத்த மாதம் 25-ஆம் தேதி வரை பாசனத்திற்குத் தண்ணீர் திறக்கப்படும் என்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் இப் பகுதியில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## விவசாயத் தொழிலாளர் சங்க பிரசாரக் குழு சிவகிரி வருகை

விவசாயத் தொழிலாளர் சங்க பிரசாரக் குழுவினர் கோவையில் இருந்து புறப்பட்டு, சிவகிரி வழியாக சென்னைக்கு பயணம் மேற்கொண்டனர்.

அனைத்து ஏழைகளுக்கும் குடியிருக்க பட்டா வழங்கக் கோரி இந்த பிரசாரப் பயணம் நடைபெறுகிறது. மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் இருந்து ஒரு லட்சம் பேர் இந்தப் பயணத்தில் பங்கேற்க உள்ளனர். பிரசாரப் பயண வழிகளில் மக்களிடம் மொத்தம் ஒரு கோடி கையெழுத்துப் பெற்று அரசிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கோவையில் முன்னாள் எம்எல்ஏ நா.பெரியசாமி தலைமையிலான பிரசாரக் குழுவினர் மார்ச் 10-ஆம் தேதி புறப்பட்டு, கோவை, திருப்பூர் மாவட்டங்கள் வழியாக, ஈரோடு மாவட்டம், சென்னிமலைக்கு வந்தனர். பின்னர் அங்கிருந்து சிவகிரி வழியாக புதன்கிழமை சென்றனர்.

சிவகிரிக்கு வந்த பிரசாரக் குழுவுக்கு சிவகிரியில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள், விவசாயத் தொழிலாளர் சங்கத் தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலர் வரதராஜன், முன்னாள் எம்எல்ஏ கிருஷ்ணமூர்த்தி, நகரப் பொருளாளர் சண்முகம் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 38.51 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 412 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.22 டி.எம்.சி.

## கண் கெடுமுன் ஞானம்!

வேளாண் உயிரி-பாதுகாப்பு ஆணையம்' (அக்ரிகல்சுரல் பயோசெக்யூரிட்டி அத்தாரிட்டி) அமைப்பதற்கான மசோதா மக்களவையில் மார்ச் 11-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதா குறித்து யாரும் பேசவில்லை; விவாதிக்கவில்லை; மசோதா தாக்கல் செய்யப்பட்டதுகூட பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்குமா என்பதும் சந்தேகம்தான். இருப்பினும், இந்த மசோதா உடனடியாக நிறைவேற்றப்பட்டு, நாளையே அமலுக்கு வந்தாலும் அதற்காக இந்திய மக்கள் நம் அரசியல்வாதிகளுக்கு நன்றி சொல்வார்கள். அந்த அளவுக்கு அதன் தேவை இருக்கிறது.

வேளாண் உயிரி-பாதுகாப்பு ஆணையத்தின் முதன்மை நோக்கம் என்ன என்றால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உணவு தானியங்களுடனும், வெளிநாட்டவர் மற்றும் இந்தியர் சிலராலும் நம் நாட்டுக்குள் வந்து சேரும் விலங்குகள், செடிகொடிகள், பூச்சிகள், கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர் ஆகியவற்றால் மனிதருக்கு நோய்களும், விளைநிலத்தில் களைகளும், பயிர்களைத் தின்னும் பூச்சிகளும் வந்துவிடாதபடி தடுத்தல், கட்டுப்படுத்துதல், அழித்தொழித்தல், மேலாண்மை செய்தல் ஆகியனவே இந்த ஆணையத்தின் அரும்பணி.

இந்த ஆணையம் ஏன் அவசியம்? என்று விளக்கும் மத்திய அரசு, "உலகமயமாதல் காரணமாக வேளாண்மையின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் பொருளாதாரத்தைக் குலைக்கும் வகையில், மோசமான களைத் தாவரங்கள், பூச்சிகள் புகுத்தப்படும் அபாயம் உள்ளது. மரபணு பொறியியல் வளர்ச்சி காரணமாக. புதிய நுண்ணுயிர்கள் இந்தியாவுக்கு வரும் ஆபத்தினை முறையாக மதிப்பிடவும், மேலாண்மை செய்யவும் வேண்டும். அதிகரித்துவரும் பயோ-டெரரிஸத்தை எதிர்கொண்டாக வேண்டும்' என்று மத்திய அரசு விளக்கம் அளித்திருப்பதைப் பார்க்கும்போது இதன் தேவையை எவரும் புரிந்துகொள்ள முடியும்.

வளர்ந்த நாடுகள் இத்தகைய தேவையற்ற நுண்ணுயிரிகளும், தாவரங்களும் தங்கள் மண்ணில் வந்து கலந்து, தேவையற்ற சுற்றுச்சூழல் கேட்டினையும், மக்களுக்கு உடல்நலக் கேட்டையும் விளைவிக்கக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளன. இறக்குமதி செய்யப்படும் பொருள்களை துறைமுகம் அல்லது விமானநிலையத்திலிருந்து கொண்டு செல்லும் முன்பாக, கவனமாகக் கண்காணிக்கின்றன. வெளிநாட்டிலிருந்து வருவோர் கொண்டுவரும் தாவரம், வளர்ப்புப் பிராணி ஆகியவற்றை அதிக கவனத்துடன் ஆராய்கின்றன.

இந்திய விமான நிலையங்களில் வெளிநாடுகளிலிருந்து வருவோரிடம் சோதனைகள் நடத்தப்பட்டாலும், சில அரியவகை பூச்செடி அல்லது வேறு தாவர வகைகள், விதைகளை,

அதிகாரிகளை ஏமாற்றியோ, அல்லது அதிகாரிகளைச் சமாளித்தோ எளிதாகக் கொண்டு வர முடிகிறது.

இறக்குமதியாகும் கோதுமை உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருள் அடைக்கப்பட்ட மூட்டைகளுடன் கலந்து வரும் நுண்ணுயிரி அல்லது சிறு களைச்செடி விதைகள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்துவது இல்லை. இவ்வாறாக இந்தியா வந்த தேவையற்ற தாவரங்கள் நிறைய. அவை தீமையாக அமைந்ததே அதிகம். அவற்றில் குறிப்பிடத்தக்கவை இரண்டு. ஆகாசத் தாமரை எனப்படும் பார்த்தீனியம் மற்றும் சீமைக் கருவேல மரம்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை பார்த்தீனியத்தால் நம் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டது. பார்த்தீனியம் ஒழிப்புக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா தனியாக ஒரு திட்டத்தையே அறிவித்தார்.

1960-களில் வறட்சி நிலவிய காலத்தில் கிராமத்தினருக்கு விறகு வெட்டிப் பிழைக்கவென கொண்டுவரப்பட்ட வேலிக் காத்தான் அல்லது சீமை கருவேல் எனப்படும் "புரோசோபிஸ் ஜூலிஃப்புளோரா' வகை மரங்கள் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டன. அன்றைய நாளில் இதன் மோசமான பின்விளைவுகள் குறித்து யாரும் அறிந்திருக்கவில்லை.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டுமே சுமார் 52,000 ஹெக்டேரில் விதைக்கப்பட்ட இந்த வேலிக்காத்தானின் வேர்கள் மண்ணுக்குள் சுமார் 50 அடி ஆழம் சென்று உறிஞ்சக்கூடியவை. ஆனால், இந்தச் செடிகள் நீர்நிலைப் பகுதிகளிலேயே அதிகமாக நடப்பட்டதால், இவை ஏரி குளங்களுக்கு எதிரானதாகஅமைந்துவிட்டன. இந்த வேலிக் காத்தான் தற்போது தமிழ்நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறது.

வேலிக் காத்தான், பார்த்தீனியம் ஆகியன நம் காண நேர்ந்த தாவரங்கள். இதுபோன்று நாம் அறியவராத களைச்செடிகள், பயிர்களைத் தின்னும் பூச்சிகள் எத்தனை வந்து சேர்ந்தன, வந்துகொண்டிருக்கின்றன? யாருக்கும் தெரியாது.

நாம் கண்கொண்டு காண முடியாத மரபணு மாற்றப்பட்ட நுண்ணுயிர்கள் என்னவெல்லாம் இறக்கிவிடப்பட்டு, காற்றில் பரவிக் கொண்டிருக்கிறதோ நாம் அறியோம்! சக்திமிக்க மருந்துகளுக்கே நோய்கள் கட்டுப்படாமல் இருப்பதற்கும், தொற்றுநோய்கள் இந்தியாவில் அதிகரிப்பதற்கும், பெயர் தெரியவராத மர்மநோய்கள் தாக்கி மக்கள் இறப்பதற்கும் காரணம், நாம் அறியாமலேயே நம் நாட்டுக்குள் வந்த நுண்கிருமிகள் மற்றும் மரபணு மாற்றப்பட்ட நுண்ணுயிர்கள் என்று சொல்வதற்கு இடம் இருக்கிறது.

பயிர்களுக்குப் புதிதுபுதிதாக நோய்கள் வரும். பன்னாட்டு நிறுவனங்கள் அதற்கு பூச்சிகொல்லி மருந்துகளை விற்கும். மனிதர்களுக்குப் புதிது புதிதாக நோய்கள் வரும். மாத்திரைகள் விற்பனையாகும். உலகமயமாக்கலின் பங்களிப்புகள் இவை. பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் தேசத்தின் கதவுகளைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்து விட்டபோதே வந்திருக்க வேண்டிய ஞானம் இது!

இத்தனை காலம் தூங்கினீர்களா? என்று கேட்பதா அல்லது இப்போதாகிலும் விழித்துக் கொண்டீர்களே என்று நமது ஆட்சியாளர்களைப் பாராட்டுவதா?

இன்றைய வேளாண் செய்திகள்

14.03.2013 A.M

## மதுரையில் சொட்டு நீர் பாசன முறையில் பூ சாகுபடி கடும் வறட்சியை சமாளிக்கும் விவசாயிகள்



சத்திரப்பட்டி: மதுரையில் கடும் வறட்சி நிலவுவதால், பூ சாகுபடி விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையில் பூக்களை வளர்க்கின்றனர்.மதுரையில் பருவமழை பொய்த்து விவசாயப் பணிகள் முடங்கியுள்ளன. பெரியாறு, வைகை அணைகளின் நீரை நம்பி, மதுரை உட்பட ஐந்து மாவட்டங்களில் விவசாயம் நடக்கிறது. அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால் அணைகள் வறண்டு வருகின்றன. குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவுகிறது. மதுரையில் கிணற்றுப் பாசனம் மூலம் வாழை, தானிய வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. எனினும், கிணறும் படிப்படியாக வறண்டு வருகிறது.சொட்டு நீர் பாசனம்: சத்திரப்பட்டி பகுதிகளில் விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையில் பூக்களை பயிரிட்டுள்ளனர். விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்குவதால், கிணறு இல்லாத விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் "போர்வெல்' அமைத்து, தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். பாரப்பட்டியில் விவசாயிகள் பலர் சொட்டு நீர் பாசன முறையில் கோழிக்கொண்டை, செவ்வந்தி, முள்ளில்லா ரோஜா போன்ற பூக்களை பயிரிட்டு, விளைச்சல் கண்டுஉள்ளனர்.விவசாயி கீதா: இப்பகுதியில் மூன்று ஆண்டாக மழையில்லை. "போர்வெல்' தண்ணீரை பயன்படுத்தி 50 சென்ட்டில் கோழிக்கொண்டை, 50 சென்ட்டில் முள்ளில்லா ரோஜா வளர்க்கிறோம். சீசன் நேரத்தில்

கோழிக்கொண்டை கிலோ ரூ.50 வரையிலும், ரோஜா கிலோ ரூ.70 வரையிலும் விலை போகிறது. கோழிக்கொண்டை நடவு செய்து மூன்றாவது மாதத்தில் இருந்து 60 நாட்கள் வரை, ரோஜா நடவு செய்து ஆறாவது மாதத்தில் இருந்து ஐந்து ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும்.

தோட்டக்கலைத்துறையினர் மலர் விவசாயிகளுக்கு மானியம் வழங்கினால், ஏழை விவசாயிகள் பயனடைவர், என்றார்.

## கறிக்கோழி உற்பத்தியை குறைக்க பண்ணையாளர்கள் முடிவு



பல்லடம்:பண்ணை கொள்முதல் விலை சரிவு காரணமாக, கறிக்கோழி உற்பத்தியை, 20 சதவீதம் குறைக்க, பல்லடத்தில் உள்ள கறிக்கோழி ஒருங்கிணைப்பு, குழு முடிவு செய்துள்ளது.

இக்குழுவின் அவசரக் கூட்டம் பல்லடத்தில் நடைபெற்றது. அதில், பண்ணை கொள்முதல் விலை சரிவை தடுக்க, வரும் செப்டம்பர் வரை, 20 சதவீதம் கறிக்கோழி உற்பத்தியை குறைப்பது, ஓராண்டு தாய் கோழி மற்றும் கோழி குஞ்சு உற்பத்தியை குறைப்பது என, முடிவெடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழகத்தில் பல்லடம், பொங்கலூர், உடுமலை, ஈரோடு, நாமக்கல் உட்பட, பல இடங்களில், 10 ஆயிரம் கறிக்கோழி பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளில், தினமும், 10 லட்சம் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஐந்து லட்சம் கோழிகள், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு, விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. மூன்று லட்சம் கோழிகள், கேரளாவிற்கும், தலா ஒரு லட்சம் கோழிகள், ஆந்திரா, கர்நாடக மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.தற்போது நோன்பு காலம் என்பதால், கிறிஸ்துவர்கள் இறைச்சி சாப்பிடுவதில்லை. இதன் காரணமாக, நோன்புக்கு முன், கிலோ, 75 ரூபாயாக இருந்த கறிக்கோழி விலை, தற்போது, 50 ரூபாயாக வீழ்ச்சி அடைந்துள்ளது. பண்ணை

கொள்முதல் விலை வீழ்ச்சியால்,கிலோவிற்கு,15 ரூபாய் வரை இழப்பு ஏற்படுவதாக,கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

## ஊட்டி தேயிலை விற்பனையை உயர்த்த புதிய திட்டம்



ஊட்டி,:நீலகிரி மாவட்டத்தில், அரசின் 'ஊட்டி டீ' விற்பனையை பிரபலப்படுத்த, முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில அரசின், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை கூட்டமைப்பு (இன்கோ), குன்னூரில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.விற்பனை கூடங்கள்:இந்த அமைப்பின் சார்பில், 'ஊட்டி டீ' என்ற பெயரில், தேயிலை தூள் தயாரிக்கப் பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் விற்கப்பட்டு வருகிறது. தவிர, ஆங்காங்கே 'இன்கோ விற்பனை கூடங்கள்' அமைக்கப்பட்டு,'ஊட்டி டீ' விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக வாசலில், மக்கள் குறை தீர்ப்பு நாட்களில், 'ஊட்டி டீ' விற்பனை செய்யப்படுகிறது. மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மூலம், இந்த விற்பனை நடந்து வருகிறது.

'வாரந்தோறும் திங்கட்கிழமைகளில், மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு ஏராளமான மக்கள், மனு வழங்க வருவர். அவர்களிடையே, 'ஊட்டி டீ' யை பிரபலப் படுத்தி, அதன் விற்பனையை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது,' என, பண்டக சாலை ஊழியர்கள் கூறினர்.கடந்த ஜன., 4ம் தேதி, ஊட்டி எடக்காடில், தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடந்த விழாவில், 'ஊட்டி டீ'யை ஆவின் பாலகங்களில் விற்பனை செய்யும் திட்டம் துவக்கப்பட்டது.ஆவின் பாலகங்கள்நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஆவின் பாலகங்கள், டீக்கடைகள், சில்லரை கடைகளாக தான் செயல்படுகின்றன. அங்கு டீ, காபி, வடை உள்ளிட்ட தின்பண்டங்கள் விற்கப்படுகின்றன.

ஒரு சில ஆவின் பாலகங்கள், இட்லி, தோசை உணவுகளையும் விற்கின்றன. பல பாலகங்களில், 'ஊட்டி டீ', விற்கப்படுவது குறித்து மக்களுக்கு தெரியவில்லை. இது குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க, அரசு முயற்சி மேற்கொண்டால் 'ஊட்டி டீ' விற்பனை இமலும் அதிகரிக்கும் என, நீலகிரி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## நேரடி புளி விற்பனையில் விவசாயிகளுக்கு ஆதாயம்



திண்டுக்கல்:திண்டுக்கல்லில், ஆண்டுக்கு ஒரு முறை நடக்கும் புளிச்சந்தை துவங்கியது. வியாபாரிகள், இடைத்தரகர்கள் இல்லாமல், விவசாயிகளே நேரடியாக விற்பனை செய்தனர். தமிழகத்தில், புளி விளைச்சல் அதிகம் உள்ள மாவட்டத்தில், திண்டுக்கல்லும் ஒன்று. மாவட்டத்தில் நத்தம், சாணார்பட்டி, ஏ.வெள்ளோடு, நரசிங்கபுரம், ரெட்டியார்சத்திரம், வடமதுரை ஆகிய ஊர்களில், அதிக எண்ணிக்கையில், புளிய மரங்கள் உள்ளன.

திண்டுக்கல்லில் ஆண்டுக்கு, ஒரு முறை கூடும் புளிச்சந்தை, திங்கட்கிழமை துவங்கியது. வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் இச்சந்தை கூடும். இது, ஜூலை மாதம் வரை நீடிக்கும். கொட்டையுடன் கூடிய புளி கிலோ, 30 ரூபாய்க்கும், கொட்டை எடுத்த புளி கிலோ, 60 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

ராமையன்பட்டி விவசாயி ஸ்டீபன் கூறுகையில், "ஆண்டுதோறும், 5 மாதங்கள் நடக்கும் புளிச்சந்தையில், விவசாயிகள் நேரடியாக வந்து விற்பனை செய்கின்றனர். வியாபாரிகள், இடைத்தரகர்கள் இல்லாததால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. வரத்து அதிகம் என்பதால், விலையை குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது' என்றார்.

## ஆடு வளர்ப்பவர்களுக்கு புல் வளர்க்கும் பயிற்சி

கம்பம்: க.புதுப்பட்டியில் ஆடு வளர்ப்பவர்களுக்கு ஊறுகா புல் வளர்க்கும் பயிற்சியை கால்நடைத்துறை மற்றும் உழவர் பயிற்சி மையம் வழங்கியது. ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகள் வளர்ப்பவர்களுக்கு தீவன தட்டுப்பாடுபெரிய சவாலாக உள்ளது. தீவன பற்றாக்குறையை சமாளிக்க பல நவீன சாகுபடி முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆடுகள் வளர்ப்பவர்களுக்கு ஊறுகா புல் வளர்க்கும் பயிற்சி ஒன்றை கால்நடைபராமரிப்பு துறை மற்றும் தேனி உழவர் பயிற்சி மையம் வழங்கியது. க.புதுப்பட்டியில் உள்ள ஸ்ரீ ஆட்டுப்பண்ணையில் நடைபெற்ற பயிற்சி முகாமிற்கு கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் ஜெகன்முத்தையா தலைமை வகித்தார். தேனி உழவர் பயிற்சி மையத்தின் உதவி பேராசிரியர்கள் செந்தில்குமார், ஸ்ரீபாலாஜி ஆகியோர் பயிற்சியளித்தனர். 50 க்கும் மேற்பட்ட ஆடு வளர்ப்பவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 75 மானியத்தில் புல்வெட்டும் கருவி 5 பேர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் புல் வளர்ப்பதற்கு ரூ. 15 ஆயிரம் மானியமாக வழங்கப்பட்டது.

## வறட்சியால் நீரின்றி காய்ந்து வரும் கரும்பு

தேவதானப்பட்டி: பெரியகுளம் பகுதியில், கடும் வறட்சியால் கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து, சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்புகள் வயல்களில் காய்ந்து கருகி வருகின்றன. பெரியகுளம் ஒன்றியம், நல்லகருப்பன்பட்டி, மேல்மங்கலகம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, குள்ளப்புரம், சங்கரமூர்த்திபட்டி, லட்சுமிபுரம் பகுதிகளில் கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு, கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பருவமழை பொய்த்தது. இதனால் நீர்நிலைகளான கண்மாய், ஊரணிகள் நீரின்றி வறண்டு காணப்படுகின்றன. விவசாய கிணறுகளுக்கு நீர் ஆதாரமாக விளங்கும் நீர்நிலைகள் வறண்டதால், கிணறுகளுக்கு கிடைத்து வந்த நீரூற்று நின்று விட்டது. இதானல் பல விவசாய கிணறுகளில் நீர் வற்றி, வறண்டு போயுள்ளன. தொடர்ந்து மழை பெய்யும், என்று நம்பி விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்தனர். நீண்ட காலப்பியிரான கரும்பு, நடவு செய்து 4 முதல் 6 மாதங்கள் ஆன நிலையில், வயல்கள் நீரின்றி காய்ந்து வருகின்றன. சில்வார்பட்டி, கோயில்புரம் ஆகிய கிராமங்களில் பாதிப்பு அதிகமாக காணப்படுகிறது.

## மஞ்சள் வேக வைக்கும் தொழிலில் கொப்பறைக்கு ரூ.10 கூலி குறைவு

ஈரோடு: மழையின்றி கடும் வறட்சியால், மஞ்சள் உற்பத்தி பாதித்ததால், நடப்பாண்டு மஞ்சள் வேகவைக்க, கொப்பறைக்கு, பத்து ரூபாய் வரையில் கூலியை குறைத்துள்ளனர்.
ஈரோடு மாவட்டம் மஞ்சள் உற்பத்தியில் மாநிலத்தில் முதலிடம் பெற்றுள்ளது. நெல்லுக்கு

அடுத்தபடியாக விவசாயிகள் மஞ்சள் பயிரிடுவது வழக்கமாகும்.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் வாய்க்கால் பாசன பகுதியில், தேவையான மழை பெய்து, வாய்க்காலில் முழுமையான பாசன வசதியை பெறும் போது, 25 முதல், 30 ஆயிரம் எக்டேர் வரையிலான நிலத்தில் விவசாயிகள் மஞ்சள் பயிரிடுகின்றனர். ஆண்டுதோறும் வைகாசி மாதம் துவங்கி, ஆடி வரையிலும் மஞ்சள் விதைப்பு நடைபெறும். நன்கு வளர்ச்சியடைந்த நிலையில், மாசி மாதம் துவங்கி விவசாயிகள் அறுவடை செய்கின்றனர்.

கடந்த, 2010ல் மஞ்சள், குவிண்டால், 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையான நிலையில், அனைத்து விவசாயிகளும் மஞ்சள் பயிரிட்டு, விற்பனைக்கு வந்தபோது, குவிண்டால், 2,000 ரூபாய் என குறைந்தது.

தற்போது, மழையின்றி விவசாயிகள் குறைந்த அளவே மஞ்சளை பயிரிட்டனர். வழக்கமான அளவை காட்டிலும் மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் மஞ்சள் பயிரிட்டுள்ளனர்.

கிணற்று பாசனம் மூலமாக பயிரிட்ட மஞ்சளின் அழிவை தடுத்து, தற்போது மாவட்டம் முழுவதுமாக மஞ்சள் அறுவடையை துவக்கியுள்ளனர். பயிரிட்ட பரப்பளவு மற்றும் உற்பத்தி குறைந்த நிலையில், அறுவடையான மஞ்சளை வேகவைப்பதற்கான கூலியையும், கொப்பறை ஒன்றுக்கு, பத்து ரூபாய் வரையில் குறைத்துள்ளனர்.

இதுபற்றி சாவடிபாளையம் விவசாயி பழனிச்சாமி கூறியதாவது:

மாவட்டத்தில் தற்போது மஞ்சள் அறுவடை துவங்கியுள்ளது. வறட்சி, போதிய மழையின்றி கிழங்குகள் போதிய வளர்ச்சியடையவில்லை.

ஏக்கருக்கு, 150 கொப்பறை வரையில் உற்பத்தி குறைந்துள்ளது. கடந்தாண்டு மஞ்சள் வேகவைக்க, சிறு விவசாயிடம் கொப்பறைக்கு, 50 ரூபாயும், ஆயிரம் கொப்பறை வரையிலான பெரிய விவசாயிடம் கொப்பறைக்கு, 35 முதல், 40 ரூபாய் வரையில் வசூலித்தனர்.

பயிரிட்டு பரப்பளவு, உற்பத்தி குறைந்ததால், மஞ்சளை வேகவைக்க கூலியை கொப்பறைக்கு, பத்து ரூபாய் வரை குறைத்துள்ளனர். 500 கொப்பறை வரை வேகவைக்க, கொப்பறைக்கு, 40 ரூபாய்யும், பெரிய அளவிலான விவசாயிகளிடம் கொப்பறைக்கு, 30 ரூபாய் வரையிலும் வசூலிக்கின்றனர்.வேகவைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலை இல்லாததால் கிடைக்கும் விலைக்கு வேகவைத்து கொடுக்கின்றனர், எனக்கூறினார்.

## உயிர் தண்ணீர் திறக்கக்கோரி அரக்கன்கோட்டை விவசாயிகள் மனு

சத்தியமங்கலம்: அரக்கன்கோட்டை, பெருமுகை, அத்தாணி வாய்க்கால் பாசன சங்க தலைவர் சுகுமார் தலைமையில், 250 விவசாயிகள், பவானிசாகர் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் வெங்கடாசலத்திடம் மனுக்கொடுத்தனர்.

அம்மனுவில் அவர்கள் கூறியதாவது:

பவானிசாகரில் இருந்து பவானி ஆற்றின் மூலம் விடப்படும் தண்ணீர், கொடிவேரியில் இருந்து பிரிந்து, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு வருகிறது. கடந்த ஒன்பது மாதமாக, தண்ணீர் விடாத காரணத்தால், 2,200 ஏக்கர் விவசாயம் கேள்விக்குறியாகிவிட்டது.

கீழ்பவானி வாய்க்காலில் தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. கீழ்பவானி வாய்க்காலில் ஒரு நாள் விடக்கூடிய தண்ணீர், அரக்கன்கோட்டை பாசனப்பகுதிக்கு, ஒரு வாரத்துக்கு போதுமானதாக இருக்கும்.

எனவே, அரக்கன்கோட்டை பாசனப்பகுதிக்கு உடன் உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும், எனக்கோரி உள்ளனர்.

## கடும் வறட்சியால் கருகும் தென்னை மரங்கள்

கோபிசெட்டிபாளையம்: நம்பியூர் சுற்று வட்டாரத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் தென்னை மரங்கள் முற்றிலும் கருகி விட்டதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில், மூன்று லட்சத்து, 83 ஆயிரத்து, 370 எக்டேரிகளில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. 467 கோடி தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. தேசிய அளவில் தமிழகத்தில், 20 சதவீத பரப்பில் தென்னை பயிரிடப்பட்டு, 34 சதவீத தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் தென்னை காய்ப்புத்திறன் ஒரு எக்டேருக்கு ஆண்டுக்கு, 12 ஆயிரத்து, 959 தேய்காயாக உள்ளது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை ஒரு தென்னை மரத்தில் ஆண்டுக்கு, 100 முதல், 150 காய்கள் வரை உற்பத்தியாகிறது.

பவானிசாகர் அணை பாசன பகுதிகளான கோபி, அத்தாணி, டி.என்.பாளையம், நம்பியூர், குன்னத்தூர், கொங்கர்பாளையம், கொடிவேரி, கடத்தூர், பங்களாபுதூர், கள்ளிப்பட்டி, சிறுவலூர், கொளப்பலூர், குருமந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளது. தென்னை மரத்தில் உற்பத்தியாகும் தேங்காய் முதல், மட்டை வரை வியாபாரம் செய்யப்படுகிறது.

கோபி பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் பருப்புக்கு கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் உள்ள தேங்காய் எண்ணெய் ஆலைகளில் நல்ல மவுசு உண்டு. மாதந்தோறும்

கேரளா மற்றும், தமிழகத்தில் விருதுநகர், திருநெல்வேலி உள்ளிட்ட பகுதியை சேர்ந்த எண்ணெய் ஆலை அதிபர்கள் மற்றும் வியாபாரிகள் கோபியில் நேரடியாக, கொப்பரை கொள்முதல் செய்கின்றனர்.

சென்ற ஆண்டு பருவமழை பொய்த்ததால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்தது. ஈரோடு மாவட்டத்தில் பல இடங்களில் கடுமையான வறட்சி நீடிப்பதால் தென்னை மரங்கள் முற்றிலுமாக கருகியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேளாண்மை துறை அதிகாரி கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் நீர் பற்றாக்குறையால் தென்னை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கி உள்ளனர். தென்னையில் ஊடுபயிராக மஞ்சள், வாழை போன்றவை பயிரிடலாம். தென்னையின் மூலம் ஆண்டுக்கு, 50 ஆயிரம் முதல், 60 ஆயிரம் ரூபாய் வரை லாபம் பெற முடியும். தென்னையில் ஈரியோபைட் சிலந்தி தாக்கிவிடுகிறது.

ஈரியோபைட் சிலந்தி மிகச்சிறிய பூச்சி. வாய் உறுப்பு கடித்து மென்று உண்ணும் வகையிலும், உறிஞ்சும் வகையிலும் அமைந்துள்ளது. இந்த பூச்சிகள், இரண்டு முதல், ஆறு மாத வளர்ச்சியுள்ள இளங்குரும்பைகளில் காணப்படும். ஈரியோபைட் தாக்குவதால் தேங்காய் பருப்பின் அளவு, 30 சதவீதம் வரை குறைந்து விடும். தாக்கப்பட்ட காய்களின் உரிமட்டை நாரின் தரம் குறைந்துவிடுகிறது.

ஈரியோபைட் சிலந்தியால் தாக்கப்பட்ட தேங்காய்களில் இளநீர் மற்றும் பருப்பில் உள்ள சர்க்கரை சத்தின் அளவு கணிசமாக குறைந்து விடுகின்றது. ஈரியோபைட் சிலந்தியின் தாக்குதல் காரணமாக தமிழகத்தில் கொப்பரை தேங்காய் உற்பத்தியில், 10 முதல், 35 சதவீதம் இழப்பு ஏற்பட்டுள்ளது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் தேங்காய் மகசூலில், 17 சதவீத இழப்பும், தேங்காய் எடையில், 37 சதவீத இழப்பும், சந்தை விலையில், 44 சதவீத இழப்பும், மூன்றாவது மற்றும் நான்காவது தர தேங்காய் எண்ணிக்கை, 46 சதவீதம் குறைந்துள்ளது, என்றார்.

## தேங்காய் உடைக்கும் களங்களில் உற்பத்தி கொப்பரை விலை சரிவால் வேலை இழப்பு

சென்னிமலை: தேங்காய் கொப்பரை திடீரென விலை சரிவு ஏற்பட்டதால் கட்டுப்படியான விலை கிடைக்காததால், காங்கேயம், ஊத்துக்குளி பகுதியில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலைகள் முடங்கியுள்ளது.

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் மற்றும் ஊத்துக்குளி வட்டாரத்தில் தேங்காய் உடைத்து, காய வைத்து, கொப்பரையாக மாற்றும் தேங்காய் களம், இரண்டாயிரத்துக்கும் அதிகமாக உள்ளது. தேங்காய் கொப்பரையை அரைத்து, தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகளும், 300க்கும் அதிகமாக செயல்படுகிறது. இங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணி செய்கின்றனர்.

கடந்த ஃபிப்ரவரி முதல் வாரத்தில் எண்ணெய் உற்பத்திக்கு பயன்படும் கொப்பரை ஒரு கிலோ, 53 முதல், 55 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. வட மாநிலத்துக்கு உணவுக்காக அனுப்பப்படும் கொப்பரை கிலோ, 57 முதல், 58 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் ஒரு தேங்காய் விலை, ஐந்து முதல் ஆறு ரூபாய் வரையும், பொள்ளாச்சி பகுதி காய், ஏழு முதல், எட்டு ரூபாய் வரை விற்பனையானது.

தேங்காய் விலை குறையாமல், 30 நாளில் கொப்பரை விலை மட்டும் கிலோவுக்கு, பத்து ரூபாய் வரை சரிவை சந்தித்துள்ளது. இதனால் தேங்காய் கொப்பரை உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இத்தொழிலில் இல்லாத சிலர், விலை ஏற்றம் செய்ய வேண்டும் என்றும், குறுகிய காலத்தில் லாபம் பார்க்க நினைக்கும் சில இடைதரகர்களும் கொப்பரையை அதிகம் இருப்பு வைக்கின்றனர். விலை ஏறியதும் விற்க உள்ளனர், என இத்தொழிலில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

தேங்காய் விலை, தேங்காய் கொப்பரை விலை, தேங்காய் எண்ணெய் விலைக்கும் சம்பந்தம் இல்லை.

தற்போது தேங்காய் வாங்கி கொப்பரை ஆக்கி விற்றாலும், எண்ணெயாக்கி விற்றாலும் நஷ்டம் ஏற்படுவதால், காங்கேயம், ஊத்துக்குளி பகுதியில் பலர் தொழிலை நிறுத்தி உள்ளனர். தேங்காய் களங்கள், 20 சதவீதம் கூட இயங்கவில்லை. தேங்காய் எண்ணெய் ஆலைகளும் உற்பத்தியை குறைத்ததால், ஆயிரக்காணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

இதுபற்றி, காங்கேயம் பகுதியில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் மூன்று தலைமுறையாக ஈடுபட்டு வரும் தனபால் கூறியதாவது:

இவ்விலை சரிவு, தொழில் செய்பவர்களுக்கு பெருத்த அடியாகும். விலை கூடுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. விலை இன்னும் குறைந்து விடுமோ என்ற பயத்தில் வியாபாரிகள், பலர் கொப்பரையை விற்கின்றனர்.

கொப்பரை விலை சரிவை சந்தித்தாலும் தேங்காய் மட்டை, தொட்டி விலை கொஞ்சம் கூடுதல் அடைந்துள்ளது. அது கொப்பரை உற்பத்தியாளர்களுக்கு கொஞ்சம் மகிழ்ச்சியை கொடுக்கிறது. பாமாயில் இறக்குமதியால் குறைந்த விலையில் பாமாயில் கிடைக்கிறது. உணவுக்காக செல்லும் தேங்காய் எண்ணெய் நுகர்வு மிக குறைந்து விட்டது. எனவே, எண்ணெய் விலை, 15 கிலோ டின், 150 ரூபாய் வரை குறைந்துவிட்டது. இதனால் கொப்பரையை அதிக விலை கொடுத்து வாங்க

முடியாத நிலையில் ஏற்பட்டுள்ளது. இது தற்காலிக சரிவு தான். விரைவில் சீராகும் என நம்புகிறோம், என்றார்.

## கோடையில்ஆடுகள் பராமரிப்பு விவசாயிகளுக்கு யோசனை

ஈரோடு: கோடை காலத்தில் ஆடுகள் பராமரிப்பது குறித்து, ஈரோடு கால்நடை பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய டாக்டர், ஆடு வளர்ப்போருக்கு யோசனை தெரிவித்துள்ளார்.
ஆடு வளர்ப்பு நல்ல லாபம் தரக்கூடிய தொழிலாகும். ஆடுகளை எல்லா தட்ப வெப்ப நிலை மற்றும் எல்லா நிலப்பிரதேசங்களிலும் வளர்க்கலாம். ஆடுகள், புல், பூண்டு, முட்செடிகள், அறுவடை செய்து மீதமிருக்கும் வேளாண் பொருட்களை உண்டு வளரக்கூடிய திறனை பெற்றிருப்பதால், குறைந்த செலவில் ஆடுகளை வளர்க்கலாம். இளம் ஆட்டுக்குட்டிகள் பராமரிப்பில் அதிக கவனிப்பு தேவைப்படும் காலம் கோடைக்காலமாகும்.
ஆடுகள் வளர்ப்போர் அனைவரும், இளம் ஆட்டு குட்டிகளை கோடை காலத்தில் பராமரிக்கும் வழிமுறைகளை, ஈரோடு கால்நடை பல்கலைக்கழகம் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவி பேராசிரியை கவிதா தெரிவித்தார்.
மேலும் அவர் கூறியதாவது: பிறந்த குட்டியின் வாய் மற்றும் மூக்குத்துவாரம் போன்ற பகுதியில் உள்ள கோழையை அகற்றி சுத்தம் செய்து, மூச்சுவிட ஏதுவாக இருக்குமாறு செய்தல் வேண்டும். தொப்புள் கொடியை, 2 செ.மீ., அளவுக்கு விட்டு வெட்டி, டிஞ்சர் ஆயோடின் அல்லது டெட்டால் போன்ற கிருமி நாசியினை தடவ வேண்டும்.
குட்டிகள் பிறந்த அரை மணி நேரத்தில் இருந்து இரண்டு மணி நேரத்துக்குள் சீம்பால் குடிக்கச் செய்ய வேண்டும். பிறந்தது முதல் இரண்டு நாட்களுக்கு மூன்று முறையும், பிறகு இரு முறையும் சீம்பால் ஊட்ட வேண்டும். குட்டிகளை அடைக்கும் கொட்டகை மண் தரையாக இருந்தால், அரை அடி அளவுக்கு மண்ணை எடுத்துவிட்டு புது மண்ணுடன் சுண்ணாம்பு தூள் போட்டு நிரப்ப வேண்டும்.
குட்டிகள் விடுவதற்கு முன் கொட்டகையை நல்ல கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். குட்டிகளை அடைக்குமிடம் நல்ல காற்றோட்ட வசதியுடன், தரை ஈரம் இல்லாமலும், வெளிச்சம் நிறைந்த இடமாக இருக்க வேண்டும். கோடை காலங்களில் இளம் குட்டிகளுக்கு வெப்பத்தை குறைக்க, கோணிப்பை மற்றும் கூரை மீது நீர் தெளித்தல் முறைகளை கையாள வேண்டும். குட்டிகளுக்கு, 10 முதல், 15 நாள் ஆனதும் மென்மையான பசுந்தீவனங்களான பயிறு வகை புல்வகைகளை கொடுக்க வேண்டும். குட்டிகளுக்கு முதல் ஆறு மாதத்துக்கு மாதம் ஒரு முறை குடற்புழுநீக்கம் செய்தல் வேண்டும். முதல் மூன்று மாதங்களுக்கு குட்டிகளுக்கு எடை முறையான பராமரிப்பு செய்து குட்டிகளின் எடையை அதிகரிக்க வேண்டும். இந்த காலகட்டத்தில் அதனுடைய வளர்ச்சியில் குறை ஏற்பட்டால் ஒரு நல்ல உற்பத்தி திறன் உடைய ஆடாக வருவது கடினம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## எண்ணெய் வித்துகளுக்கு மவுசு அதிகரிப்பால், நிலக்கடலை சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்

கரூர்: முக்கிய எண்ணெய வித்து பயிரான நிலக்கடலைக்கு அதிக விலை கிடைப்பதால், கரூர் மாவட்டத்தில் கடலை சாகுபடியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.
கரூர் மாவட்டத்தில் இறவை சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர். கடும் வறட்சி ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், தண்ணீர் குறைவாக தேவைப்படும் அல்லது சொட்டுநீர் பாசனத்துக்கு ஏற்ற பயிர்களை, அதிகளவில் விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.
தற்போது தாந்தோணி, கிருஷ்ணராயபுரம், கடவூர், குளித்தலை, பரமத்தி ஆகிய சுற்றுவட்டார கிராமங்களில், மானாவாரி பயிரான நிலக்கடலை சாகுபடி தீவிரமடைந்துள்ளது. இங்கு, 3,680 ஹெக்டேர் நிலப்பரப்பில் கடலை பயிரிடப்பட்டுள்ளது. இவைகளுக்கு அடுத்தமாதம் அறுவடை பருவம் என்பதால், கவனமாக விவசாயிகள் பராமரிக்க வேண்டும் என, வேளாண் அதிகாரிகள் கூறுகின்றனர்.
இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது:
இப்பகுதிகளில் டி.எம்.வி.7, டி.எம்.வி.13, கோ.2, போன்ற ரகங்கள் பெரும்பாலும் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில், உழவு, மரம் அடித்தல், நாற்று நடுதல், களையெடுத்தல், பாத்தி அமைத்தல், அறுவடை செய்தல் உட்பட பல்வேறு பணிகள் அனைத்தும் இயந்திரத்தின் மூலம் நடக்கிறது.
பொதுவாக கடலையை, ஜனவரி மாதம் நடவு செய்து, ஏப்ரல் மாதம் அறுவடை செய்யப்படுகிறது. இப்போது, இரண்டாம் களை எடுக்கும் பணி நடப்பதால், விவசாயிகள் ஜிப்சம் உரங்களை மறக்காமல் இடவேண்டும். ஜிப்சம் உரங்கள் போதுமான அளவு வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்பதால், தேவைக்கு ஏற்ப வாங்கி கொள்ளலாம்.
ஒரு ஏக்கருக்கு கடலை பயிரிட, 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு ஏற்படும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. ஏக்கருக்கு, 600 கிலோ வரை கடலை உற்பத்தி செய்ய முடியும். முக்கிய எண்ணெய் வித்துகளில் ஒன்றாக கடலை இருப்பாதல், மார்க்கெட்டில் கிலோ, 60 ரூபாய் வீதம் குவிண்டால், 6,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மேலும் தீவன விலை ஏற்றதால், கடலை செடியின் கொடிகள், கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்க வழி இருக்கிறது. கரூர் மாவட்ட விவசாயிகள் கடலையை, வெள்ளாக்கோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்றால், உரிய விலை கிடைக்கும்.

## வறட்சி நிவாரண திட்டம் கரூர் கலெக்டர் அறிவிப்பு

கரூர்: "வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், கரூர் மாவட்டத்தில் தீவன பயிர் உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது' என, கலெக்டர் ஜெயந்தி கூறினார்.அவர் வெளியிட்ட அறிக்கை:வறட்சியின் பாதிப்பை கருத்தில் கொண்டு, தமிழக அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறது. இதில் ஒரு பகுதியாக, விவசாயிகள் பயன்பெறும் வகையில் மானியத்துடன், தீவன பயிர் உற்பத்தி செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.கரூர் மாவட்டத்தில், 700 ஏக்கர் நிலத்தில் மானாவாரி பயிரான, தீவன சோளம் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. அறுபது நாட்களில் விளையக் கூடிய, இந்த பயிருக்கான விதைகள், கால்நடை பராமரிப்பு துறை மூலம் வழங்கப்படவுள்ளது. ஒரு ஏக்கர் சாகுபடியில், 10 டன் தீவன பயிர் உற்பத்தி செய்யலாம். ஒரு ஏக்கருக்கு சாகுபடிக்கு, 13 ஆயிரத்து, 600 ரூபாய் செலவாகும் என, கணக்கிடப்பட்டுள்ளது. இதில் மானியமாக, 6,800 ரூபாயை அரசு வழங்க உள்ளது.விவசாயிகள் உற்பத்தி செய்யும் தீவனப் பயிர்களை, பசுந்தீவனமாக கிலோ, இரண்டு ரூபாய், காய்ந்த தீவனமாக கிலோ, பத்து ரூபாய் என்ற விலையில் அல்லது அப்பகுதி சந்தை நிலவரப்படி, அருகில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யப்படும்.மேலும் பசுந்தீவன உற்பத்தி திட்டத்தின் கீழ், பல்லாண்டு பயிர் ரகங்கள் கோ-3, கோ-4, தீவன பயிர் ரகங்கள் சாகுபடி செய்ய, 526 ஏக்கருக்கு மானியம் கொடுக்கப்படுகிறது. இதற்கு உத்தேச செலவு ஏக்கருக்கு, 12 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக, ஒரு ஏக்கர் சாகுபடிக்கு மானியம் அளிக்கப்படும்.இறவை பாசன வசதியுள்ள விவசாயிகள், நாளைக்குள் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில், தங்கள் பெயர், நிலம் போன்ற விபரங்களை பதிவு செய்ய வேண்டும். மேலும் முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

## சரிவு!நெல்வரத்து திடீரென அதிகரித்ததால் அரிசி விலை...."ஸ்டாக்' வைத்துள்ள வியாபாரிகள் கலக்கம்

திருத்தணி:கடந்த மூன்று மாதங்களாக, அதிகரித்து வந்த அரிசியின் விலை, நெல் வரத்து அதிகரித்ததால், ஒரு வாரமாக திடீரென சரிந்தது. இதனால், இருப்பு வைத்து விற்பனை செய்யும் ஆலையின் உரிமையாளர்கள் மற்றும் கடை வியாபாரிகள் கலக்கம் அடைந்து உள்ளனர்.

150 ஆலைகள்

மாவட்டம் முழுவதும், 150 அரிசி ஆலைகள் உள்ளன. இதில், திருத்தணி, பள்ளிப்பட்டு தாலுகாக்களில், 15 நவீன அரிசி ஆலைகள், 10 சாதாரண அரிசி ஆலைகள் என, மொத்தம், 25 ஆலைகள் உள்ளன.

தமிழகம் மற்றும் ஆந்திரா பகுதிகளில் உள்ள விவசாயிகள், தற்போது சூப்பர் பொன்னி, வெள்ளை பொன்னி, பாபட்லா பொன்னி, ஏடிடி,37 (குண்டு நெல்), ஏடிடி,45, ஏடிடி,39 ஆகிய நெல் ரகங்களை பயிர் செய்கின்றனர்.

குறிப்பாக, மாவட்டத்தில், சூப்பர் பொன்னி, ஏடிடி,37 (குண்டு நெல்), ஏடிடி,45, ஏடிடி,39 ஆகிய நான்கு நெல் ரகங்களை தான் பெரும்பாலான விவசாயிகள் பயிர் செய்கின்றனர்.

திருத்தணி, பள்ளிப்பட்டு தாலுகாக்களில் உள்ள ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் வியாபாரிகள் தஞ்சாவூர், ஊத்துக்கோட்டை, திருவாலங்காடு, பூண்டி, திருத்தணி, அரக்கோணம், பட்டாபிராமபுரம் முருக்கம்பட்டு, நல்லாட்டூர், ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை மற்றும் அதை சுற்றியுள்ள, 120 கிராமங்களில் இருந்து நெல் கொள்முதல் செய்கின்றனர்.

சில ஆலை உரிமையாளர்கள், ஆந்திர மாநிலம், நெல்லூர், கடப்பா மற்றும் காளஹஸ்தி ஆகிய பகுதிகளில் இருந்து லாரிகள் மூலம் மொத்தமாக கொண்டு வந்து "இருப்பு வைத்து தேவைக்கு ஏற்ப நெல்லை அரைத்து விற்பனை செய்கின்றனர்.

25 கிலோ மூட்டை

இப்படி கொள்முதல் செய்யப்படும் நெல்லை, நவீன அரிசி ஆலைகள் மூலம் அரைத்து, 25 கிலோ மூட்டை சிப்பங்களாக தயார் செய்து, திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை, திருவாலங்காடு, பொதட்டூர்பேட்டை, அத்திமாஞ்சேரிபேட்டை, சோளிங்கர், அரக்கோணம் மற்றும் அதை சுற்றியுள்ள, 150க்கும் மேற்பட்ட பகுதிகளில் உள்ள அரிசி கடைக்காரர்களுக்கு சப்ளை செய்கின்றனர்.

இதுதவிர, சென்னை,வேலூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கும் லாரிகள் மூலம் அரிசி மூட்டைகள் அனுப்பப்படுகின்றன.

திடீர் அதிகரிப்புகடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு, நெல்வரத்து குறைவாலும், மின்தடை அதிகரிப்பாலும், சரியாக அரிசி ஆலைகள் இயங்கவில்லை. இதனால், அரிசியின் விலை, நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. கடுமையான விலை ஏற்றத்தால் நடுத்தர மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தினர் தரமான அரிசியை வாங்க முடியாமல் தவித்து வந்தனர்.

இது குறித்து, திருத்தணி அரிசி ஆலை உரிமையாளர் சித்தரஞ்சன் கூறியதாவது:

மூன்று மாதத்தில் அரிசியின் விலை, 25 கிலோ மூட்டைக்கு, 200 ரூபாய் முதல், 600 ரூபாய் வரை அதிகரித்தது. ஆனால், கடந்த 10 நாட்களாக, அரிசியின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டு உள்ளது. தற்போது, 25 கிலோ மூட்டைக்கு, 150 முதல், 550 ரூபாய் வரை குறைந்து உள்ளது.இதற்கு காரணம், கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு பெய்த மழை, நெற் பயிருக்கு தகுந்த சீசன் தொடங்கியதால் பெரும்பாலான விவசாயிகள் நெற்பயிர் செய்தனர்.தற்போது, அனைத்து விவசாயிகளும் நெல் அறுவடை செய்து ஆலை மற்றும் வியாபாரிகளுக்கு கொடுப்பதால் அரிசியின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டது. எங்களை போல் சில ஆலை உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகள் மொத்தமாக நெல் கொள்முதல் செய்து, ஆறு மாதம் முதல், மூன்று மாதம் வரை இருப்பு வைத்து, அரிசி தயாரிப்போம். இந்த திடீர் விலை குறைவால், நஷ்டம் அடைகிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## தர்பூசணி விற்பனை படுஜோர்

சங்கராபுரம்:கோடை துவங்கும்முன்பே சங்கராபுரத்தில் தர்பூசணி விற்பனை துவங்கியது.சங்கராபுரம் பகுதியில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. சங்கராபுரம் பகுதியில் கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் நீர் நிலைகளில் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் திருவண்ணாமலை மாவட்டம் போளுரிலிருந்து தர்பூசணி பழம் சங்கராபுரத்திற்கு விற்பனைக்கு வந்துள்ளது. தாகத்தை தணிக்கும் தர்பூசணியை பொது மக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். பழம் 20 ருபாயில் இருந்து 40 வரை விற்கப்படுகிறது.

## சங்கராபும் பகுதிகளில் காரிப் பருவ நடவு பணி துவக்கம்

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் காரிப் பருவம் துவங்கியதையடுத்து வயலை உழுது நாற்று நடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சங்கராபுரம் பகுதியில் அக்டோபர் மாதம் சம்பா சாகுபடியை துவங்கிய விவசாயிகள் தை மாதம் அறுவடையை முடித்தனர். தற்போது இப்பகுதியில் காரிப் பருவம் துவக்கியுள்ளனர். அதையொட்டி வயலை உழுது, நடுவு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

சங்கராபுரம் பகுதியில் 50,000 ஏக்கர் பரப்பளவில் நெல், சோளம், கரும்பு, பயறு வகைகள், தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் போன்றவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வேளாண் துறை சார்பில் இடுபொருட்கள் மான்ய விலையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்திற்கான விதைகள், ஜிப்சம், உயிர் உரம், நுண் உரம், போன்றவைகள் வேளாண் விரிவாக்க மையம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு வருவதாக சங்கராபுரம் வேளாண் அலுவலர் விஜயகுமார் தெரிவித்தார்.

## சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி சாகுபடி தீவிரம்

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி பகுதியில் பருவமழை பொய்த்ததால் நீர்நிலைகள் வறண்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து வருவதால் கிணற்று பாசனத்தை நம்பி பயிர் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

கிணற்று பாசனத்தில் சிக்கனமாக தண்ணீரை பயன்படுத்தும் வகையில் கள்ளக்குறிச்சி பகுதியில் சொட்டு நீர் பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக கள்ளக்குறிச்சி

பகுதிகளில் மரவள்ளி சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் மூலம் அதிகம் பயன்படுத்துகின்றனர். தண்ணீர் சேமிப்பு மற்றும் அரசு மான்யம் கிடைப்பதால் சொட்டு நீர் பாசனத்தை விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர். கள்ளக்குறிச்சி அடுத்த இந்திலி, கனியாமூர், தொட்டியம், தெங்கியாநத்தம், குரால், எலவடி, கூகையூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

## குளிர்பதன கிடங்கு தனியாருக்கு ஒப்படைப்பு :விவசாயிகள் பெரும் பாதிப்பு

தர்மபுரி: பாலக்கோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள தக்காளி குளிர்பதன கிடங்கு தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், 20 ஆயிரம் ஹெக்டரில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக மாவட்டத்தில் பென்னாகரம், பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் இருந்து, சென்னை, கோவை, திண்டுக்கல், மதுரை, நெல்லை மற்றும் கேரளா போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. சந்தைக்கு தக்காளி வரத்து அதிகரிக்கும் போதும், தென் மாநிலத்தில் தக்காளி உற்பத்தி அதிகரிக்கும் காலங்களிலும், போதிய விலையில்லாமல், தக்காளி விவசாயிகள் அவதியடைந்து வந்தனர். தக்காளி விவசாயிகளை பாதுகாக்க பாலக்கோட்டில் தமிழக அரசு, வேளாண் துறை சார்பில் தக்காளி குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும், என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துவந்தனர். விவசாயிகளின் வேண்டுகோளை, ஏற்று அரசு கடந்த, இரு ஆண்டுகளுக்கு முன் பாலக்கோட்டில், ஒழுங்கு முறை விற்பனை கூடம் மற்றும், தக்காளி குளிர்பதன கிடங்கு அமைத்தது.

தக்காளி விலை குறைந்த நேரங்களில், விவசாயிகள் குளிர்பதன கிடங்கில் தக்காளியை வைத்து, விலையேற்றத்தின் போது, விற்பனை செய்து வந்தனர். பாலக்கோடு, ஒழுங்குமுறை விற்பனை கூட்ட வளாகத்தில் உள்ள தக்காளி குளிர்பதன கிடங்கு, சாரல் என்ற தொண்டு நிறுவனத்திற்கு, ஒப்பந்த முறையில் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ தக்காளி தற்போது, ஒன்று முதல், இரண்டு ரூபாய் வரை குறைந்த விலைக்கு விற்பதால், விவசாயிகள் தக்காளி கூடைகளை குளிர்பதன கிடங்கிற்கு வைக்க சென்றுள்ளனர். குளிர்பதன கிடங்களின் தங்களது பொருட்கள் நிறைந்துள்ளதால், தக்காளியை வைக்க முடியாது, என அவர்கள் விவசாயிகளிடம் தெரிவித்துள்ளனர். இதனால், விவசாயிகள் குறைந்த விலைக்கு

விற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகம் தக்காளி குளிர்பதன கிடங்கு, ஒப்பந்தத்தை, ரத்து செய்து விவசாயிகள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வேளாண் விற்பனை குழு செயலர் முருகேசன் கூறியது:

பாலக்கோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், உள்ள தக்காளி குளிர்பதன கிடங்கு, சில மாதங்களுக்கு முன் சாரால் என்ற தொண்டு நிறுவனத்திற்கு, ஒப்பந்த முறையில் வழங்கப்பட்டுள்ளது. அவர்களிடம், விவசாயிகள் கொண்டு வரும் தக்காளியை கூடைகளை, வைக்க அனுமதிக்க வேண்டும், என உத்தரவிடப்பட்டுள்ளது. தக்காளி கூடைகளை குளிர்பதன கிடங்கில் வைக்க, சாரால் தொண்டு நிறுவனம் அனுமதி மறுத்தால், விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலர்கள் மற்றும் வேளாண் விற்பனை அலுவலர்கள், செயலர் உள்ளிட்டவர்களிடம் புகார் தெரிவிக்கலாம்.இவ்வாறு கூறினார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

14.03.2013 A.M

## விளைச்சல் குறைந்ததால் மஞ்சள் விலை ரூ.8 ஆயிரத்தை தாண்டியது



ஈரோடு : மஞ்சள் விளைச்சல் குறைந்ததால் விலை ஏறுமுகமாக உள்ளது. இதன் காரணமாக, ஒரு குவின்டால் சேலம் விரலி மஞ்சள் விலை ரூ.8 ஆயிரத்தை தாண்டியது.

ஈரோட்டில் நேற்று அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் 422 மூட்டை மஞ்சள் வந்தது (75 கிலோ) அனைத்தும் விற்பனையானது.

விரலி மஞ்சள் குவின்டாலுக்கு அதிகபட்சம் ரூ.7777க்கும், குறைந்தபட்சம் ரூ.6191க்கும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சம் ரூ.6669க்கும், குறைந்தபட்சம் ரூ.5691க்கும் விலை போனது. விரலி மஞ்சள் குவின்டால் நேற்று முன் தினம் அதிகபட்சமாக ரூ.7169க்கு விற்ற நிலையில் நேற்று ரூ.600 வீதம் விலை உயர்ந்து ரூ.7777க்கு விலை போனது. ரூ.6242க்கு விற்பனையான கிழங்கு மஞ்சள் நேற்று ரூ.6669ஆக விலை அதிகரித்திருந்தது.

வெளிமார்க்கெட்டை பொறுத்தவரை நேற்று முன்தினம் ரூ.7389க்கு விலைபோன விரலி ரகம் நேற்று ரூ.300 வீதம் உயர்ந்து ரூ.7606க்கு ஏலம் போனது. ரூ.6111க்கு விற்ற கிழங்கு மஞ்சள் நேற்று ரூ.6256க்கு விற்பனையானது. சேலம் மஞ்சள் மார்க்கெட்டை பொறுத்தவரை நேற்று ஒரே நாளில் விரலி ரகத்தின் விலை ரூ.8329 ஆக உயர்ந்தது. இந்த ஆண்டில் மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.8 ஆயிரத்தை கடந்திருப்பது இதுவே முதன்முறை. அதேபோல சேலம் கிழங்கு மஞ்சள் விலையும் கணிசமாக உயர்ந்து குவின்டால் ரூ.6806க்கு விலை போனது.

விலை உயர்வு குறித்து ஈரோடு மஞ்சள் கிடங்கு உரிமையாளர் மற்றும் விற்பனையாளர் சங்கத்தின் தலைவர் ரவிசங்கர் கூறியதாவது: சேலம் விரலி மஞ்சள் விலை எப்போதும் மற்ற ரகங்களை காட்டிலும் கூடுதலாக ஏலம் போகும். இந்த ஆண்டில் முதன்முறையாக சேலம் விரலி மஞ்சள் விலை குவின்டால் ரூ.8 ஆயிரத்தை கடந்துள்ளது.
கடும் வறட்சியால் ஈரோடு, சேலம் பகுதிகளில் மஞ்சள் விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக, நடப்பாண் டில் மஞ்சள் விலை உயருவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

## கீழணைக்கு நீர்வரத்து குறைந்தது ஒரு மாதம் வரை மட்டுமே சென்னைக்கு வீராணம் நீர்



காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள கீழணை தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதன் செயல்பாடுகள் அனைத்தும் சிதம்பரம் பொதுப்பணித்துறை சார்பில்

செயல்படுத்தப்படுகிறது. இந்த அணைக்கு கல்லணையிலிருந்து கொள்ளிடம் ஆற்றின் வழியாக தண்ணீர் வரும். இங்கு தேக்கப்படும் தண்ணீரால் கட லூர் மாவட்டத்தில் சுமார் 1 லட்சம் ஏக்கர் பாசனம் பெறுகின்றன. வீராணம் ஏரிக்கும் தண்ணீர் அனுப்பப்படுகிறது. இந்த ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து சரிவர தண்ணீர் அனுப்பப்படாததாலும் பருவ மழை பெய்யாததாலும் அணையில் தண்ணீர் தொடர்ந்து தேக்குவதில் சிக்கல் ஏற்பட்டது. கடந்த மாதம் கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படாததால் கீழணையில் தண்ணீர் இல்லாமல் வறண்டன. இதனால் வடவாறு வழியாக வீராணம் ஏரிக்கு தண்ணீர் அனுப்பும் பணியும் நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக வீராணம் ஏரி விரை வில் வறண்டது. சென்னைக்கு குடிநீர் அனுப்பும் பணியும் நிறுத்தப்பட்டது. இதனால் சென்னைக்கு குடிநீர் அனுப்புவதற்கு ஏதுவாக கடந்த சில தினங்களாக கல்லணையிலிருந்து கீழணைக்கு வினாடிக்கு 350, 250 என கனஅடி தண்ணீர் அனுப்பப்பட்டது.

இதனால் கீழணையில் மொத்த கொள்ளளவான 9 அடியில் ஐந்து அடி தேக்கப்பட்டது. இதன் மூலம் வினாடிக்கு 1500 கனஅடி வீதம் வடவாறு வழியாக ஏரிக்கு அனுப்பப்பட்டது. இதனால் ஏரியின் நீர் மட்டம் 41.60 அடியாக உயர்ந்தது. இதிலிருந்து சென்னைக்கு வினாடிக்கு 40 கனஅடி வீதம் தண்ணீர் அனுப்பப்படுகிறது. இந்நிலையில் கல்லணையிலிருந்து தண்ணீர் அனுப்பும் பணி படிப்படியாக குறைக்கப்பட்டு வினாடிக்கு 50 கனஅடி வீதம் தண்ணீர் வருகிறது. கீழணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து 2 அடியாக உள்ளது. இதிலிருந்து வினாடிக்கு 450 கனஅடி வீதம் வடவாறு வழியாக அனுப்பப்படுகிறது. கீழணைக்கு கல்லணையிலிருந்து தண்ணீர் அனுப்புவது குறைக்கப்பட்டதாலும், ஏரிக்கு தண்ணீர் வருவது குறைந்துள்ளது. தற்போது தேக்கப்பட்டுள்ள தண்ணீர் சென்னைக்கு குடிநீருக்கு சுமார் ஒரு மாதம் வரை செல்லும் என கூறப்படுகிறது. அதன் பிறகு தண்ணீர் அனுப்புவது நிறுத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.

## யானை கூட்டம் அட்டகாசம் அரூர் அருகே 3 ஏக்கர் கரும்பு, நெல் நாசம்

அரூர், : வாழை, கரும்பு பயிர்களை தின்று ருசி கண்ட யானைகள், காட்டிற்குள் செல்லாமல் இரவு நேரங்களில் விளை நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருகின்றன. நேற்று முன்தினம் இரவு மட்டும் 3 ஏக்கர் கரும்பு மற்றும் நெற்பயிர்களை நாசம் செய்துள்ளன.

இந்த ஆண்டு பருவ மழை இல்லாததால் வனப்பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் ஜவ்வாது மலைப்பகுதியில் இருந்து 6 யானைகள் வெளியேறி கடந்த 15 நாட்களுக்கு முன் சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதிக்கு வந்தன. 3 நாள் போராட்டத்திற்கு பின்னர் அந்த யானைகள், அரூர்

வனப்பகுதிக்கு விரட்டப்பட்டன. பகலில் வனப்பகுதியில் நிற்கும் யானைகள், இரவில் விவசாய நிலங்களில் புகுந்து கரும்பு, வாழை, ராகி உள்ளிட்ட பயிர்களை நாசம் செய்து வருகின்றன. 10ம் தேதி இரவு அரூர் அருகே உள்ள கருத்தம்பட்டியில் இருந்து விடிய விடிய யானைகளை 20 கிலோ மீட்டர் தூரம் துரத்தி வாச்சாத்தி வனப்பகுதிக்கு வனத்துறையினர் விரட்டினர்.

நேற்று முன்தினம் பகலில் வாச்சாத்தி வனப்பகுதி மல்லங்குட்டையில் முகாமிட்டிருந்த யானைகள் இரவு 7 மணிக்கு காட்டைவிட்டு வெளியேறின. மல்லங்குட்டையில் பழனி, காளியப்பன் ஆகியோருக்கு சொந்தமான நிலத்தில் புகுந்து 3 ஏக்கர் கரும்பு, நெல் உள்ளிட்ட பயிர்களை தின்றும், மிதித்தும் நாசம் செய்தன. நள்ளிரவு 12 மணிக்கு கூக்கடப்பட்டிக்கு வந்த யானை கூட்டம் விவசாயி அசோகனின் நிலத்தில் வாழைகளை சூறையாடியது. நேற்று அதிகாலை 4 மணிக்கு மீண்டும் மல்லங்குட்டை காட்டிற்குள் புகுந்தது.

யானைகளை காட்டிற்குள் விரட்டும் பணியில் மாவட்ட வன அலுவலர் (பொ) ராஜேந்திரன் தலைமையில் ரேஞ்சர்கள் அரூர் முனுசாமி, மொரப்பூர் மனோகரன், கோட்டப்பட்டி ஜெகதீசன், தீர்த்தமலை மனோகரன் உள்பட 50க்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். பகலில் பதுங்கிக் கொள்ளும் யானைகள், இரவில் விவசாய பயிர்களை நாசம் செய்து வருகின்றன. கரும்பு, வாழை, ராகியை தின்று ருசி கண்டுள்ளதால் யானைகளை காட்டிற்குள் விரட்டுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தர்மபுரியில் இருந்து நேற்று முன்தினம் பயிற்சி பெற்ற 2 அலுவலர்கள் வரவழைக்கப்பட்டு யானைகளை விரட்டும் பணி நடந்து வருகிறது.

ஜவ்வாது மலையில் உள்ள இந்த யானைகள் ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறு கிராமங்களுக்குள் புகுந்து விவசாய பயிர்களை நாசம் செய்வது தொடர்கதையாகி வருகிறது. யானைகளை அதன் போக்கிலேயே விட்டு, ஜவ்வாது மலைக்கு விரட்ட முயற்சி செய்வதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## ஓசூரில் விவசாயிகளுக்கு அட்மா திட்ட பயிற்சி

ஓசூர், : ஓசூரில் விவசாயிகளுக்கு அட்மா திட்ட பயிற்சி நடைபெற்றது.

ஓசூர் வட்டாரம் மல்லசந்திரம் கிராமத்தில் உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் 50 விவசாயிகளுக்கு கிராம அளவிலான பயிற்சி நடந்தது. இதற்கு வேளாண்மை துணை இயக்குனர் ரவி தலைமை தாங்கினார். பயிற்சியின் போது நீரை சிக்கனமாக பயன்படுத்தும் முறை பற்றியும், நீர்சேமிப்பு திட்டங்கள் பற்றியும் சிறப்புரையாற்றினார்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் புனிதவள்ளி மண் பரிசோதனையின்

முக்கியத்துவம் பற்றியும், மண் மாதிரி எடுக்கும் முறை பற்றியும் பேசினார். அலவசப்பள்ளி ஊராட்சி மன்ற துணை தலைவர் ஹேமந்த்குமார் பேசினார். அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் கீதா திட்டம் செயல்படும் முறை குறித்து பேசினார். இதில் அட்மா திட்ட தொழில் நுட்ப வல்லுனர்கள் ரவிச்சந்திரன், சண்முகம் ஆகியோர் விதை நேர்த்தி பற்றியும், அதன் பயன் பற்றியும் விளக்கினார்கள். இதில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.கடன் சுமையால் தொழிலாளி தூக்கிட்டு தற்கொலை

சூளகிரி, : சூளகிரி அடுத்த தேவகுட்டப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த சின்னராமசாமி மகன் கார்த்திகேயன்( 30). விவசாய கூலி தொழிலாளி. இவரது மனைவி வள்ளி. இவர்களுக்கு 2ஆண் குழந்தைகள் உள்ளனர். கார்த்திகேயன் அதிக கடன் சுமையினால் அடிக்கடி மனக்குழப்பத்தில் இருந்து வந்துள்ளார். கடந்த சிவராத்திரியன்று கிருஷ்ணகிரி அருகே சினனத்தாழப்பள்ளியிலுள்ள வள்ளியின் பெற்றோர் வீட்டிற்கு வள்ளியும், 2 குழந்தைகளும் சென்று விட்டனர். இந்நிலையில் வீட்டில் தனியாக இருந்த கார்த்திகேயன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதை அறிந்த உறவினர்கள் வி.ஏ.ஓ. தண்டபாணிக்கு தகவல் கொடுத்தனர். அவரது புகாரின் பேரில் சூளகிரி போலீசார் சடலத்தை மீட்டு வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## கோழிகளுக்கு வெப்ப அயற்சி ஏற்படும்

நாமக்கல், : கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்படும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 3 நாட்களுக்கான வானிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வரும் 3 நாட்களுக்கு வானம் தெளிவாக காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 3 கி.மீ வேகத்தில் மேற்கில் இருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சமாக 100 டிகிரியும், குறைந்தபட்சமாக 73 டிகிரியும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 78 சதவீதமும், குறைந்த அளவு 20 சதவீதமாகவும் காணப்படும்.

பகல் வெப்பம் அதிகமாக இருப்பதால் கோழிகளில் வெப்ப அயற்சி இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே பிற்பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை தண்ணீரின் அளவும், அதன் வெப்பமும் கண்காணிக்கப்பட்டு வரவேண்டும். கோழிகளில் குடிநீர் குழாயின் வழியாக மனையின் இறுதிவரை செல்லும். அதன் வெப்பம் உயராமல் இருக்குமாறு அவ்வப்போது நீரை வெளியேற்ற வேண்டும். இதனால் கோழிகளில் வெப்ப அயற்சி குறைக்கப்படும்.

ஓரளவு நீர்பாசன வசதியுள்ள விவசாயிகள் குறைந்தது 10 சென்ட் நிலத்தில் தீவனப்புல்

சாகுபடியை மேற்கொள்ளலாம். இதில் 4 சென்ட் நிலத்தில் கம்பு, நேப்பியர்புல், கோ 4 ரகத்தையும், 3 சென்ட் நிலத்தில் தீவன சோளத்தையும் பயிர் செய்யலாம். மீதமுள்ள 3 சென்ட் நிலப்பரப்பில் வேலிமசால் விதைப்பு செய்யலாம். இவைகளை சுற்றி வரப்பு பயிராக அகத்தி மற்றும் தாபாபுல் மரங்களை நடவுசெய்யவேண்டும். இந்த தீவன சாகுபடியில் ஒரு கறவை மாடு அல்லது 5 ஆடுகளுக்கு தேவையான பசுந்தீவனத்தை ஆண்டு முழுவதும் பெறலாம்.இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

14.03.2013 A.M

## ஆண்டிப்பட்டி அருகே முருங்கைக்காய் விலை வீழ்ச்சி

கண்டமனூர்

ஆண்டிப்பட்டி அருகே முருங்கைக்காய் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. கிலோ ரூ.8–க்கு விற்பனைஆவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

**முருங்கைக்காய் சாகுபடி**

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி அருகே தெப்பம்பட்டி, பாலக்கோம்பை, மாவூற்று வேலப்பர் கோவில், கணேச புரம், கண்டமனூர், ஜி.உசிலம் பட்டி, கதிர்நரசிங்க புரம், கன்னியப்பபிள்ளைப்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங் களில் ஆயிரக்கணக் கான ஏக்கர் பரப்பளவில் முருங்கை மரங் களை விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளுக்கு நடவு செய்தனர். தற்போது இந்த முருங்கை மரங்களில் மகசூல் கிடைக்க தொடங்கி உள்ளது. ஆண்டுக்கு இரண்டு முறை மகசூல் கிடைக்கும் முருங்கை மரங்களின் மூலம் இப்பகுதி விவசாயிகள் அதிக லாபம் அடைந்து வந்தனர்.

குறிப்பாக சொட்டு நீர்ப் பாசனம் மூலம் குறைந்த அளவு தண்ணீரே இந்த முருங்கை சாகுபடிக்கு தேவைப்படுகிறது. இந்த ஆண்டு போதிய மழை இல்லாத நிலையில், மின்சார தட்டுப்பாடும் இந்த பகுதி முருங்கை விவசாயிகளுக்கு மிகுந்த சிக்கலை ஏற்படுத் தியது. இதனை அடுத்து விவசாயிகள் டீசல் வாங்கி, மோட்டார் மூலம் கிணறுகளில் தண்ணீர் இறைத்து இந்த மரங்களில் மகசூல் குறையாமல் இருக்க நடவடிக்கை மேற்கொண் டனர்.

**விலை வீழ்ச்சி**

இதனை அடுத்து கடந்த 2 மாதங்களுக்கு முன்பு இந்த பகுதியில் உள்ள முருங்கை மரங்களில் பூக்கள் பூத்துக் குலுங்க தொடங் கின. தற்போது இந்த மரங்களில் காய்கள் அதிகளவில் காய்த்து தொங்கு கின்றன. இந்த ஆண்டு தொடக்கத்திலேயே முருங்கை சாகுபடி யில் கூடுதல் மகசூல்

என்ற அளவில் முருங்கை காய் கள் அதி களவில் காய்த்து தொங்குவதால் விவசாயி கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு முருங்கைக்காய் கிலோ ரூ.17 என்ற அளவில் விற்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த மகிழ்ச்சி 2 நாட்கள் கூட நீடிக்கவில்லை. கூடுதல் முருங்கைக் காய்கள் வரத்து எதிரொலி யாக விலை வீழ்ச்சி அடைந்து விவசாயி களை தற்போது கவலையில் ஆழ்த்தி உள்ளது. நேற்று ஒரு கிலோ முருங்கைக்காய் கிலோ 8–க்கு இந்த பகுதியில் வியா பாரிகளால் மொத்தமாக கொள்முதல் செய்யப் பட்டது.

இது குறித்து விவசாயிகளிடம் கேட்ட போது, ‘முருங்கைக்காய் சீசன் தொடங்கி உள்ள நிலை யில், உள்ளூர் தேவைகளுக்காக உள்ளூர் மார்க்கெட்டுகளுக்கே முருங்கைக் காய் தற்போது கொள்முதல் செய்யப்படுகிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முருங்கைக்காய் கடந்த ஆண்டுகளில் கொள் முதல் செய்யப்பட்டது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட போது கடந்த ஆண்டு கிலோ ரூ.80 வரை விற்பனை ஆனது. ஆனால் தற்போது வெளிநாடு களுக்கான ஏற்றுமதிக்காக முருங்கைக்காய் கொள்முதல் தொடங்க வில்லை என்பதால் இந்த விலை சரிவு விவசாயி களை கவலையில் ஆழ்த்தி உள்ளது’ என்றனர்.

## வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை இல்லை ஆனந்த் சர்மா அறிவிப்பு

புதுடெல்லி,

சென்ற சில மாதங்களாக வெங்காயம் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, இதன் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதேசமயம், இதன் விலை உயர்வு தற்காலிகமானதுதான் என்றும், போதுமான அளவிற்கு கையிருப்பு உள்ளதால் ஏற்றுமதியை தடை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்றும் மத்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா பாராளுமன்றத்தின் மேலவையில் தெரிவித்தார்.

உள்நாட்டு தேவைப்பாட்டை விஞ்சி உற்பத்தி அதிகமாக இருந்தால்தான் வெங்காயம் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவசர கால இருப்புக்கு ஒதுக்கியது போக எஞ்சியுள்ள பகுதிதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உள்நாட்டில் வெங்காயம் உற்பத்தி 1.70 கோடி டன்னாக உள்ள நிலையில், பயன்பாடு 1.50 கோடி டன்னாகத்தான் உள்ளது.

**<u>பயன்பாடு</u>**

வெங்காயம் மொத்த உற்பத்தியில் 84 சதவீதம் உள்நாட்டில் பயன்படுத்தப்படுகிறது. அவசர கால இருப்பிற்காக 6 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. 7 சதவீதம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று சர்மா மேலும் கூறினார்.

வெங்காயம் ஏற்றுமதிக்கு தடை விதிப்பதால் சர்வதேச விளைபொருள் வர்த்தக சந்தைகளில் போட்டி நாடுகளின் ஆதிக்கம் அதிகரித்து இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

ராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்கள் மற்றும் புதுடெல்லியின் ஆசாத்பூர் மண்டி பகுதியில் தொடர்ந்து நான்கு தினங்களாக பெய்த கடும் மழையால் கடந்த ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் வெங்காயம் விலை மிகவும் உயர்ந்தது. தற்போது வெங்காயம் மொத்த விலை சீராக உள்ளது என சர்மா கூறினார். இடைத்தரகர்களின் செயல்பாட்டால் வெங்காயம் சில்லறை விலை அதிகமாக உள்ளது.